1971 டிசம்பர் 11]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) அரசு 18—8—1971 முடிய 118 ஸ்தபதிகளை அங்கீகரித்து உள்ளது.

(இ) இல்லை.

Books on Tamil Archanas.

* 293 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether books on Tamil Archanas have been prepared by the Tamil Nadu Deivigha Peravai at the instance of the Government; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU K. T. K. THANGAMANI : I only want to say that within one hour we have completed 48 questions. Probably this will be a record not only for this Legislature but also for other Legislatures and Lok Sabha. முற்ப 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாராட்டாகயிருந்தாலும் எப்படியிருந்தாலும் அமைச்சர்களும் உறுப்பினர்களும் இன்னும் கொஞ்சம் ஒத்துழைப்பு தந்தால் இன்னும் அதிகமாக கேள்விகள் கேட்க முடியும். கேள்விகளில் பொது முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகளும் இருக்கின்றன. அந்த ஊரிலே பாலம் கட்டப்பட்டதா என்பதெல்லாம் அந்த ஸ்தலங்களில் அக்கறை உள்ள கேள்விகள். அவைகள் முக்கியமானவை அல்ல என்று சொல்லவில்லை. இந்த மன்றத்திலே கேள்விகளும் சுருக்கமாக இருந்து பதில்களும் சுருக்கமாக அமைந்தால் இன்னும் சிறப்பாக அமையும்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உள்ள பெரிய கோயில்களில் எத்தனை கோயில்களில் இன்றைக்கு தமிழில் அர்ச்சனை நடைபெறுகின்றது. அப்படி நடைபெறாத கோயில்களில் உடனடியாகத் தமிழில் அர்ச்சனை நடைபெறுவதற்கு முயற்சியெடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலேயிருக்கின்ற எல்லா ஆலயங்களிலும் தமிழிலே வழிபாடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உறுப்பினரவர்கள் அப்படி ஏதாவது நடைபெறாத ஆலயங்கள் இருந்து, குறிப்பிட்டால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக் குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]